Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C.297/2022** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW8** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | சரவணன் |
| Father/Husband Name | : | கோவிந்தராமன் |
| Village | : | அரியனேந்தல் |
| Taluk | : | பரமக்குடி |
| Calling | : | கிராம நிர்வாக அலுவலர் |
| Religion | : | |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2025.

<u>(எதிரி ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது பரமக்குடி தாலுகா அரியனேந்தல் கிராமத்தில் வசித்து வருகீறேன். மேற்படி கிராம நிர்வாக அலுவலராகவும் பணிபுரிந்து வருகிறேன். பரமக்குடி தாலுகா பொட்டகவயல் கிராம நிர்வாக அலுவலராக 2020 ஆகஸ்ட் முதல் 30.06.2023 வரை பணிபுரிந்தேன். அப்போது பொட்டகவயல் கிராம உதவியாளராக சேக் முக்தார் என்பவர் பணிபுரிந்தார். கடந்த 18.07.2021ம் தேதி மாலை 04.30 மணியளவில் நான் பொட்டகவயல் கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்தபோது தேவிப்பட்டினம் காவல்

ஆய்வாளர் என்னை அழைத்ததின்பேரில் நானும், கிராம உதவியாளர் சேக் முக்தாரும் நெடுந்துளசி பஸ்நிறுத்திற்கு சென்றோம். அப்போது ஆஜர் எதிரி அங்கு இருந்தார். ஆய்வாளர் அவர்கள் எதிரியை கைது செய்தார். அப்போது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளர் சேக் முப்தாரும் கையெழுத்து செய்தோம். எதிரி இரத்தக்கரை படிந்த ஒரு வெள்ளைக்கலர் அரைக்கை சட்டையை ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சி மூலம் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும், கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சியில் உள்ள சாட்சியின் கையெழுத்துக்கள் மட்டும் **அ.சா.ஆ.5 மற்றும் 6**. என்னிடம் காட்டப்படும் வெள்ளைக்கலர் சட்டைதான் எதிரி எடுத்து ஆஜர் செய்த வெள்ளை சட்டை. அது **அ.சா.பொ.2**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

நான் வழக்கு சம்பவம் நடைபெற்ற போது பொட்டகவயல் கிராம அலுவலராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். பொட்டகவயல் கிராம குரூப்புக்கு உட்பட்டு எத்தனை கிராமங்கள் இருந்தது என்றால் பொட்டகவயல், நெடுந்துளசி, உகமை ஆகிய கிராமங்கள் இருந்தன. பொட்டகவயல் கிராமத்திற்கும் நெடுந்துளசி கிராமத்திற்கும் எத்தனை கிலோ மீட்டர் இருக்கும் என்றால் சுமார் 2 ½ கிலோ மீட்டர். நான் முதன் முதலில் போலிசார் கூப்பிட்டு எங்கு சென்றேன் என்றால் நெடுந்துளசி பேருந்து நிறுத்தம். ஆய்வாளர் என்னை வாய்மொழியாகத்தான் நெடுந்துளசி பேருந்து நிறுத்தத்திற்கு வரச்சொன்னார், எழுத்து மூலமாக எதுவும் கொடுக்கவில்லை. வட்டாட்சியர் எழுத்து மூலமாக என்னை ஆய்வாளரின் புலன்விசாரணைக்கு உதவும்படி சொன்னாரா என்றால் இல்லை, ஆனால் நான் வாய்மொழியாக வட்டாட்சியருக்கு ஆய்வாளர் கூப்பிட்ட விவரத்தை சொன்னேன். நான் எத்தனை ஆவணங்களில் கையொப்பம் செய்தேன் என்றால் இரண்டு. அந்த இரண்டு ஆவணங்களும் என்னென்ன ஆவணங்கள் என்றால் ஒன்று என்னுடைய வாக்குமூலம், மற்றொன்று அத்தாட்சி. நான் கையொப்பம் இட்டதாக சொல்லும் அத்தாட்சியில் என்னென்ன பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டிருந்தது என்றால் வெள்ளைச்சட்டை மற்றும் முண்டுக்கல். நான் கையொப்பம் இட்டதாக

சொல்லும் அத்தாட்சியில் முண்டுக்கல் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் முண்டுக்கல்லை எந்த தேதியில் எங்கு வைத்து யார் கைப்பற்றினார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. முண்டுக்கல்லை யார் எங்கு வைத்து எந்த தேதியில் கைப்பற்றினார்கள் என்றால் தெரியாது. என்னென்ன ஆவணங்கள் எங்கு வைத்து எந்த தேதியில் யார் தயார் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் நெடுந்துளசியில் வைத்து வெள்ளை அரைக்கைச்சட்டையை அங்கு கைப்பற்றினார்கள். நெடுந்துளசி பஸ் ஸ்டாப்பிற்கு நான் சென்ற போது அங்கு எந்தெந்த போலிசார் இருந்தார்கள் என்றால் ஆய்வாளர், ஆனந்த் மற்றும் இரண்டு போலிசார்கள் இருந்தார்கள். நான் கையொப்பம் இட்டதாக சொல்லப்படும் ஆவணத்தில் ஆனந்த் தவிர வேறு யாருடைய பெயரும் சொல்லப்படவில்லை என்றால் ஆய்வாளர் பெயரும் இருந்தது. எதிரிதான் மறைத்து வைத்திருந்த வெள்ளைக்கலர் அரைக்கை சட்டையை ஆய்வாளரிடம் கொடுத்தார். எதிரி வெள்ளைகலர் அரைக்கை சட்டையை எந்த இடத்தில் மறைத்து வைத்திருந்து எடுத்துக்கொடுத்தார் என்றால் தான் போட்டிருந்த சட்டையைத்தான் கழற்றிக்கொடுத்தார். நான் கையொப்பம் செய்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தான் அணிந்திருந்த வெள்ளைக்கலர் அரைக்கை சட்டையை கழற்றி ஆய்வாளரிடம் கொடுத்துவிட்டு வேறு ஆடையை அணிந்து கொண்டார் என்று சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. நான் கையொப்பமிட்டதாக சொல்லப்படும் ஆவணத்தில் என்னென்ன விவரங்கள் எழுதப்பட்டிருந்தது என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் முதலில் தயார் செய்யப்பட்டதா அல்லது அத்தாட்சி முதலில் தயார் செய்யப்பட்டதா என்றால் ஒப்புதல் வாக்குமூலம் முதலில் தயார் செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்ய ஆய்வாளர் எவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டார் என்றால் அரை மணிநேரம் இருக்கும். அத்தாட்சி தயார் செய்ய எவ்வளவு நேரம் ஆகியிருக்கும் என்றால் அரை மணி நேரம் இருக்கும். நான் அத்தாட்சியில் கையெழுத்து செய்யும்போது என்ன நேரம் இருக்கும் என்றால் மாலை 05.30 மணி. ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்யும் போது நேரம் மாலை 04.30 மணி. இந்த இரண்டு கையெழுத்துக்களையும் ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் செய்தேன் என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு

கூட்டிச்சென்று விசாரித்தாரா என்றால் இல்லை. அன்றாட வேலை குறித்து ஒரு பாக்கெட் டைரி பராமரித்து வரவேண்டும் என்றால் இல்லை. நான் பாக்கெட் டைரி பராமரித்து வரவேண்டும் என்றும், அதை புலன்விசாரணை அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் இல்லை. எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் நேரமும், இடமும், அத்தாட்சி தயார் செய்த நேரமும், இடமும் ஆட்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். அந்த நேரத்தில், இடத்தில் சுமார் 10, 20 நபர் நின்றிருப்பார்களா என்றால் ஞாபகமில்லை. நெடுந்துளசி பேருந்து நிறுத்தத்தில் நிழற்குடை இருந்ததா என்றால் இல்லை. போலிசார்கேட்டுக்கொண்டதற்கிணங்க பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணங்களை நான் அரசு அலுவலர் என்பதால் மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து அத்தாட்சி, ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.